# கோவையில் பெனெஸ்டா நிறுவனத்தின் புதிய கிளை துவக்கம்

கோவை, மே 10 -

ஜன்னல்கள் மற்றும் கதவுகள் சந்தையில் இந்தியாவின் முன்னணி நிறுவனமான பெனெஸ்டா, சிவ என்டர்பிரைசஸ் என்ற பெயரில் பிரத்யேக ஷோரூமை, சாய்பாபா காலனி, அழகேசன் சாலையில் திறந்துள்ளது. சிறந்ததரமான யுபிவிசி ஜன்னல்கள் மற்றும் கதவுகள் இந்த ஷோரூமில் உள்ளது.



இந்த புதிய ஷோரூம் குறித்து பினெஸ்டா நிறுவனத்தின் வர்த்தகத் தலைவர் சாகேத் ஜெயின் கூறியதாவது :- பெனெஸ்டா நிறுவனம் வாடிக்கையாளர் களை மையமாகக் கொண்ட வெளிப்படையான அணுகு முறை மற்றும் அதிக நுகர்வோர்களை சென்றடைவது ஆகிய 2 முக்கிய அம்சங்களை கொண்டுள்ளது. இதற்காக எங்களின் ஷோரூம்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதுடன் 1000 -த்துக்கும் மேற்பட்டவகை களில் ஜன்னல்கள் மற்றும் கதவுகளை வடிவமைத்து வருகிறோம். மழை, தூசி, சத்தம், மாசு ஆகிய சுற்றுச் சூழல் விஷயங்களைக் கருத்தில் கொண்டு எங்கள் தயாரிப்புகளை வழங்கி வருகிறோம்.

எங்கள் ஷோரூம்களில் வாடிக்கையாளர்கள் அவற்றின் வகைகள், பிராண்டின் தரம் ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்ளாம். இந்த ஷோரூமை தொடங்கியிருப்பதன் மூலம் தற்போது நாங்கள் இங்குள்ள 27 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் எங்களின் ஷோரூம்களை நிறுவியுள்ளோம். பெனெஸ்டாவில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் இந்தியாவின் எல்லாவிதமான காலச்சூழலுக்கும் ஏற்றவகையில் இருக்க வேண்டும் என்பதற்காக அதன் தரத்தை பரிசோதனை செய்வதற்காக உற்பத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் கடுமையான சோதனைக்கும் தரக் கட்டுப்பாட்டுக்கும் உட்படுத்தப்படுகின்றன. இதனால் முன்னணி கட்டுமான நிறுவனங்கள், கட்டிடக்களை வல்லுநர்கள் மற்றும் உள் அலங்கார வல்லுநர்கள் மத்தியில் இது மிகவும் புகழ் பெற்றதாக உள்ளன இவ்வாறு அவர் கூறினார்.